# மகிளா நீதிமன்றம், பெரம்பலூர்
# பல்வகை மனு எண் 2/2019
# அசல் வழக்கு எண்.13/2005

2019 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31-ம் நாள் வியாழன் கிழமை மனுதாரர் தரப்பு சாட்சியாகிய ம.சா.1 அபுல்கலாம் ஆசாத் என்பவரது குறுக்கு விசாரணை, திருமதி.கே.பழனியம்மாள், பெஞ்ச் கிளர்க் கிரேடு -1 என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமாணம் செய்து வைக்கப்படுகிறது.

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

இம்மனுவில் ரூ.42 இலட்சத்திற்கான வட்டியையும் கேட்டுள்ளேன் என்றால் சரி தான். அதுமட்டுமல்லாமல் ரூ.60,90,789/- யும், வட்டியும் கேட்டுள்ளேன் என்றால் சரி தான். நான் மக்கள் நீதிமன்ற தீர்ப்பை ஏற்றுக்கொண்டேன். மக்கள் நீதிமன்ற தீர்ப்பின்படி எதிர்மனுதாரர் நடக்காததால் இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன். அந்த தீர்ப்பின்படி பொது சொத்தை விற்று தான் ரூ.42 இலட்சத்தை எனக்கு கொடுக்க வேண்டும் என்று தீர்ப்பாகியுள்ளது என்றும் தனிபட்ட முறையில் தர வேண்டியது இல்லை என்றால் சரியல்ல. மக்கள் நீதிமன்ற தீர்ப்பில் வட்டிக்கொடுக்க வேண்டும் என்ற சரத்து இல்லை என்றால் சரி தான். லோக் அதாலத் தீர்ப்பில் ரூ.60,90,789/- தர வேண்டும் என்ற சரத்து இல்லை என்றால் சரி தான். மக்கள் நீதிமன்ற தீர்ப்பு செல்லாது என்று வழக்குப்போட்டு (**O.S.No.**3/2011 மாவட்ட நீதிமன்றம்) அது தள்ளுபடி செய்யபட்டுவிட்டது என்றால் சரி தான். அதை எதிர்த்து நான் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேல்முறையீடும்(**A.S.No.**553/2017) தள்ளுபடி செய்யபட்டுவிட்டது என்றால் சரி தான். அசல் வழக்கு எண் 13/2005 தீர்ப்பை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் **A.S.No.** 993/2009 என்ற மேல்முறையீடு தாக்கல் செய்யபட்டது, அதுவும் தள்ளுபடி செய்யபட்டுவிட்டது. **A.S.No.** 993/ 2009 வழக்குடன் நான் தாக்கல் செய்த அனைத்து பல்வகை மனுக்களும் தள்ளுபடி செய்யபட்டுவிட்டது என்றால் சரி தான். மேல்முறையீட்டில் ரூ.42 இலட்சம் பொதுகடன் என்றும் பொதுசொத்தை விற்று தான் எனக்கு கொடுக்க வேண்டும் என்று சொல்லபட்டுள்ளது என்றால் சரியல்ல. பல்வகை மனு எண்

22/07 ல் நான் தாக்கல் செய்த எதிருரையில் பல்வகை மனு எண் 2/2019ல் சொல்லியுள்ள சாராம்சங்களை சொல்லவில்லை என்றால் நினைவில்லை. பல்வகை மனு எண் 2/19ல் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் நான் மனுவிற்கு தேவையில்லாத சங்கதிகளை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.